1982 மார்ச் 2] [பேரவைத் தலைவர்]

1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13 ஆம் நாள் அன்று எடுத்துக் கொள்ளப் பெறும் மானியக் கோரிக்கைகள் எண்கள் 28, 39 மற்றும் 52, ஆகியவற்றிற்கு வெட்டுத் தீர்மானங்கள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6 ஆம் நாள் காலை 11 மணிக்குள் கொடுக்கப் பெற வேண்டும்.

1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாள் முதல் எடுத்துக் கொள்ளப்பெற இருக்கும் ஏனைய மானியக் கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மானங்கள் ஏற்கனவே அறிவித்தபடி 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8 ஆம் நாள் அன்று காலை 11-00 மணிக்குள் கொடுக்கப் பெற வேண்டும்.

மற்ற அலுவல்கள் குறித்துப் பின்னர் அறிவிக்கப்படும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (3—3—1982) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

107. 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாள் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் II(1) வ.வ.ச.அ./239(பி)/81 ஆம் எண் அறிவிக்கையில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29 ஆம் தேதியிடப்பெற்ற வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 1423 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

108. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும சி.ஐ.டி. காலனி பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்தையும் அதன் அனைத்து இணைப்புகளையும் பொதுமக்கள் பார்வையிடுதல் குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் தேதியிடப் பெற்ற 1490 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[1982 மார்ச் 2

109. 1962 ஆம் ஆண்டு மே திங்கள் 22 ஆம் தேதியிடப் பெற்று வருவாய்த்துறையின் II(1) எண். 2437/1962 ஆம் எண் அறிவிக்கையில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16 ஆம் தேதியிடப்பெற்ற வணிக-வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1030 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொதுவிற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

110. சென்னை-7-ல் உள்ள பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் நடத்தும் இலவச மருத்துவ மனைக்கு வாங்கப் பெறும் மருந்துகளுக்கு விற்பனை வரியில் இருந்து விலக்களிப்பது குறித்து 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6 ஆம் தேதியிடப் பெற்ற வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1241 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

111. 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ஆம் தேதியிடப் பெற்ற வருவாய்த்துறையின் எஸ்.ஆர்.ஓ. எண். ஏ. 3240/1960 ஆம் எண் அறிவிக்கையில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 1216 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

TRUTH ALONE TRIUMPHS